**காலாண்டுத் தேர்வு : மாதிரி வினாத்தாள்**

**வகுப்பு : 10 பாடம் : தமிழ் முதல் தாள்**
**காலம் : 2.30மணி மதிப்பெண்கள் : 100**
**(செய்யுள், உரைநடை)**

**பகுதி – I (மதிப்பெண்கள் : 14)**

**பலவுள் தெரிக. (14X1=14)**

1. மெத்த வணிகலன் என்னும் தொடர் குறிப்பது.......

அ. வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ. பெரும் வணிகமும் பெரும் கலனும்
இ. ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ. வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. உலகத்திலேயே ஒரு மொழிக்காக மாநாடு நடத்திய நாடு--------
அ. இந்தியா ஆ. மலேசியா இ. சிங்கப்பூர்
ஈ. இலங்கை

3. ‘‘உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்’’ பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ. உருவகம்,எதுகை ஆ. மோனை , எதுகை
இ.முரண்,இயைபு ஈ.உவமை,எதுகை

4 .சீவலமாறன் என்னும் பட்டப்பெயர் கொண்ட பாண்டிய வேந்தன்
அ.அரிமர்த்தன பாண்டியன் ஆ. அதிவீரராம பாண்டியன்
இ.செண்பகப் பாண்டியன.
ஈ.பாண்டியன் நெடுஞ்செழியன்

5. பின்வருவனவற்றுள் முறையான தொடர்------

அ. தமிழர் பண்பாட்டாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ.தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
ஈ. தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

6.செய்தி 1–ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
செய்தி 2 –காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
செய்தி 3 - காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்.

அ.செய்தி 1 மட்டும் சரி ஆ.செய்தி 1, 2 ஆகியன சரி
இ.செய்தி 3 மட்டும் சரி ஈ.செய்தி 1 , 3 ஆகியன சரி

7. ‘‘அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை’’ - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ. தமிழ் ஆ.அறிவியல் இ.கல்வி ஈ.இலக்கியம்

8.மலர்கள் தரையில் நழுவும் எப்போது?

அ.அள்ளி முகர்ந்தால் ஆ.தளரப் பிணைத்தால்
இ.இறுக்கி முடிச்சிட்டால் ஈ.காம்பு முறிந்தால்.

9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
1.கொண்டல் - மேற்கு
2.கோடை - தெற்கு
3.வாடை - கிழக்கு
4.தென்றல் - வடக்கு
அ.1234 ஆ.2413 இ.4321 ஈ.3412

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (10, 11, 12, 13, 14) விடைதருக.**

”அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,

அலங்கு கழை நரலும் ஆரிப்படுகாச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே’’

10. மேலுள்ள பாடலடிகள் இடம்பபற்ற நூல் எது?
அ.மலைபடுகடாம் ஆ. சிலப்பதிகாரம்
இ. புறநானூறு ஈ. காசிக்காண்டம்

11. “வயிரியம்“ – என்பதன் பொருள் -

அ. தங்கி ஆ. கூத்தர்
இ. ஒலிக்கும் ஈ. பள்ளம்

12. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்கள் –
அ. அன்று - கன்று ஆ. அன்று - அலங்கு
இ. நோனாச் - மான ஈ. நூலினும், அகிலும்

13. இப்பாடலில் எரியும் கனல் எதற்கு ஒப்பாகக் கூறப்பட்டது.
அ. பூங்கொத்துகள் ஆ. அசோக மரம்
இ. மூங்கில் மரம் ஈ. சிவந்த பூக்கள்

14. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள் –
அ. அன்று - கன்று ஆ. அன்று - அலங்கு
இ. நோனாச் - மான ஈ. நூலினும், அகிலும்

**பகுதி –II (மதிப்பெண்கள் : 20)**
**பிரிவு-1**

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடைளிக்க. (5x2=10)**

15. உலகத் தமிழ் மாநாடு குறித்து க.அப்பாதுரையார் கூறுவன யாவை?
16. ‘‘நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்’’
- இது போன்ற உலகக் காற்றுநாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.
17. விருந்தினரை மகிழ்வித்து முகமன் சொற்களை எழுதுக.

18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
19. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
20. **விடைக்கேற்ற வினா அமைக்க.**
அ) உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படுவது வசன கவிதை ஆகும்.
ஆ)தேவநேயப் பாவாணர் 'மொழி ஞாயிறு' என்று அழைக்கப்பட்டார்.
21. அர்ச்சுனன் தபசு பற்றிக் கூறுக.

**பிரிவு-2 (5x2=10)**

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்குகு மிகாமல் விடையளிக்க.**
**(28 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க.)**

22. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
23. இளங்கன்று வருந்தக் காரணமாக முல்லைப்பாட்டு தெரிவிப்பன யாவை?
24. ''பொருந்து மற்றுஅவன் தன்அருகுற இருத்தல்'' - தொடர்பொருள் தருக.
25. ''இறடிப் பொம்மல் பெறுகுவீர்'' பொருள் கூறுக.
26. கழிந்தபெருங்கேள்வியின் எனக் கேட்டுமுழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்
- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?

27. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
28. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறள் எழுதுக.

## பகுதி– III (மதிப்பெண்கள் : 50)

**பிரிவு -1 (3X5 =15)**

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

29. ''புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'' - இதுபோல இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
30. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து எழுதுக.
31. காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து எழுதுக.
32. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
33. கரகாட்டம் மற்றும் கரகாட்டச் செம்பின் அமைப்பினை விளக்குக.

**பிரிவு -2 (3x5 =15)**

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.**

34. வைத்திநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.
35. மன்னன் இடைக்காடனாருக்குச் சிறப்பு செய்தது ஏன்?விளக்கம் தருக.
36. ''மாளாத காதல் நோயாளன் போல்'' - உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
37.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை கூத்தராற்றுப்படை எவ்வாறு சுட்டுகிறது?
38. வள்ளுவம் கூறும் சிறந்த அமைச்சருக்குரிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்தும் குறள் வழி விளக்குக.

**பிரிவு -3 (4x5 =20)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**
**39. பொருத்துக.**

| | |
|---|---|
| (i) எழில்முதல்வன் | -அ. அதிவீரராம பாண்டியர் |
| (ii) சீவலமாறன் | -ஆ.பாரதியார் |
| (iii) கி.ரா | -இ. ந.முத்துசாமி |
| (iv)கலைஞாயிறு | - ஈ. கி.ராஜநாராயணன் |
| (எ) பாட்டுக்கொரு புலவன் | - உ. மா.இராமலிங்கம |

**40. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**
திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்துள்ளார். இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.முகம் வேறுபடாமல் மலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை ''மோப்பக் குழையும் அனிச்சம்'' என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.
(i) மேலுள்ள உரைப்பத்தி எதைப் பற்றிப் பேசுகிறது?
(ii) பத்தியில் இடம்பெற்றுள்ள இணைப்புச் சொற்களை எடுத்தெழுதுக.
(iii) பத்தியில் அமைந்துள்ள தொழிற்சொல் எது?
(iv) அனிச்ச மலரின் செயல் யாது?
(எ) பத்தியைப் படித்துப் பார்த்து பொருத்தமான தலைப்பிடுக.

**41. படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் குறிப்பிடுக.**



42. 'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டின் மனப்பாடப் பகுதியை எழுதுக.

பகுதி IV

மதிப்பெண்கள் : 16

**விரிவாக விடையளிக்க. (2x8=16)**

43. (அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா?இக்கருத்துகளை ஒட்டிச்'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றிக் குறிப்பிடுக.

அல்லது

(ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

44. (அ)இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

அல்லது

(ஆ) இரட்டுறமொழிதல் பற்றிக் குறிப்பிட்டு, சந்தக்கவிமணியின் பாடலில் அமையும் சிலேடை நயத்தை விவரிக்க.

## ஆக்கம் -

**ச.சேட்டு மதார்சா,**

**எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,டிப்.போக்,பி.ஜி.டிப்.அனிமேசன்,பி.ஜி.டிடி.ஆர்,யு.ஜி.சி.நெட்,பிஹெச்.டி.**

**ப.ஆசிரியர்(தமிழ் ) ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி,**

**ஈரோடு -638001. அலைபேசி-8883681115**